# இந்து சாதனம்

விரோதி வருஷம (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௯௩]   யாழ்ப்பாணம்:-   நந்தன வருஷம் ஆனிமீ ௪ உ செவ்வாய்க்கிழமை (17 June 1952)   [இல - ௨௨]


## உற்ற வர்தம் உறுநோய் களைபவர்

திருச்சிற்றம்பலம்

உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்றம் ஏறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்றி லல்லதென் கண்துயில் கொள்ளுமே.

திருச்சிற்றம்பலம்

அரசியல் அலை

# மேற் சபையில் யார் இருக்க வேண்டும்?

## அநுபவசாலிகளா? யாரும் அறியாதவர்களா?

## அரசாங்கக் கட்சியார் அறியவில்லைப்போலும்

பாராளுமன்றத்தில் ஒரு மேற்சபை இருக்கவேண்டுமென்று ஆலோசனை கூறியவர்களும் அதை அங்கீகரித்து ஒரு அரசியற் றிட்டம் வகுத்த சோல்பரிக் குழுவினரும் மனதிற் கற்பனை செய்ததும் எழுத்திற் பொறித்ததும் பலரறிய விளங்க வைத்ததும் அரசியல் அநுபவம் நிறைந்த அங்கத்தினர் அமரும் மேற்சபையையே.

பாராளுமன்றம் முதல்முதல் திறவப்பட்ட பொழுது மூதர் சபையில் நியமன அங்கத்தவர்கள் பெரும்பாலும் முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்களாகவே தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆனால் பிரதிநிதிகள் சபையாராற் றெரிவு செய்யப்பெற்றவர்கள் அவ்வா றில்லாதவர்களாகவே பெரும்பாலானோர் காணப்பெற்றனர்.

இரண்டாவது பாராளுமன்றம் திறவப் பெற்றபின் பிரதமர் நியமனஞ் செய்யவேண்டியவர்களில் அநேகமாக அநுபவம் இல்லாத நடுத்தர வயதுள்ளவர்களே தெரிந்தெடுக்கப்படுவார்கள்போலக் காணப்படுகின்றது. பிரதமரோ வயதில் இளைஞர் ஆக இருப்பினும் அரசியல் அநுபவத்தில் முதிர்ந்தவர் என்று கருதப்படுவர். அன்னார் இவ்வாறு மேற்சபை உண்டுபண்ணப்பட்ட நோக்கத்தைத் தழுவாது நியமனஞ் செய்ய முயற்சிப்பது நன்றாகாது.

பல்விழுந்து சொற்றளர்ந்த கிழுகிழவர்களை அங்கே நியமிக்கவேண்டுமென பதல்ல. ஆனால் வாலிப வீறுள்ளவர்களும் பொறுப்புணர்ச்சி இல்லாதவர்களுமாகிய இளைஞர்களை முப்பதைந்து வயது எல்லை கடந்தாற் போதுமென்று நியமிப்பதையே பொதுசனம் பொல்லாப்பாய்க் கூறுகின்றது.

## உடை உற்பத்திப் பயிற்சி

சீலை செய்தலில் நுட்ப அறிவு பெறும்பொருட்டு இந்தியாவின் சீலை செய்யும் நிலையங்களில் இலங்கையர் பதினைந்து பேர் பயிற்றப்பெறுவர்.

## அத்திவாரக் கிரியை

யாத்திரிகர்களுக்காகக் கதிர்காமத்தில் ஓர் மடம் அமைக்கும்பொருட்டு இராமகிருஷ்ண சபையாரால் 8-6-52 ஞாயிற்றுக்கிழமை காலை 6-40 க்கும் 9-21க்கும் இடையில் அத்திவாரம் இடுதலாகிய கிரியை மிகச் சிறப்பாகச் செய்யப் பெற்றது.

அடியார்கள் மாணிக்க கங்கையில் நீராடி, கந்தசுவாமியை வழிபட்டு மட நிலயத்தைச் சுற்றிநின்று அருளொழுகும் அருட் பாக்களை மிகுந்த அன்புடன் இனிமையாகப் பாடினர். ஸ்ரீமத் அசங்கானந்த சுவாமி அவர்கள் ஓமாக்கினி வளர்த்தல் முதலிய கிரியைகளைச் செய்தார்.

அரோஹரா வென்னும் அருளொலி ஆரவாரிக்கக் கதிர்காம மகாதேவாலய பஸ்நாயக நிலைமை திரு. J. A. நம்புக்பொத அவர்களும அவரைப் பின்தொடர்ந்து ஸ்ரீமத் அசங்கானந்த சுவாமிகளும் திருவாளர்கள் M. கார்த்திகேசு V. ஞானபண்டிதன், T. நீதிராசா ஆகியோரும் அத்திவாரக் கற்களை இட்டனர்.

பல அன்பர்கள் [illegible] வுடன் கட்ட [illegible] நடைபெறுகின்றது.

## ஓடு செங்கட்டி உற்பத்திச்சாலை

### நீர்கொழும்பில் அமைக்கப்படுமாம்

ஓடு, செங்கட்டிகள் உண்டாக்குகிறதற்கு சாலை நிலையங்கள் அமைக்க அரசாங்க கைத்தொழிற் பகுதியார் ஒழுங்கு செய்திருக்கின்றனர். இவை தற்கால இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டு இத்துறையில் உழைக்க விரும்பும் நாட்டுமக்களுக்கு முன்மாதிரியாயமையும். தகுந்த களிமண் முதலியன பெறும் வசதிகளோடு இவற்றில உண்டாக்கப்படும் ஓடு செங்கட்டிகளை உபயோகப் படுத்துவதற்கு இலகுவான வசதிகளமைந்த இடங்களே இச்சாலைகள் அமைப்பதற்குச் சிறந்தவையாகக் கொள்ளப்படும்.

மேல்மாகாணத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இப்பொழுது நீர்கொழும்பில் ஒரு நிலையம் அமைக்கப்படும்.

## கைத்தறிச் சேலைகள்

யாழ்ப்பாணக் கைத்தறி நெசவுச் சேலைகளிலும் இந்தியாவிலிருந்து வரும சேலைகள் குறைந்த விலைக்கு வாங்கக் கூடியதா யிருக்கிற தென்றும், மாதமொன்றுக்கு யாழ்ப்பாணத்தில் 2000 சேலைகள் வரையில நெசவு செய்யப்படுகின்றன வென்றும், இது விருத்தியாவதற்கு உதவி தேவைப்படுகிற தென்றும், வேண்டிய உதவியை அரசாங்கக் குடிசைக் கைத்தொழிற் பகுதியார் கொடுக்க ஆலோசிக்கின்றன ரென்றும் அறிய வருகிறது.

## சீனி ஆக்கம்

சீனிஆக்க அறிஞர் திரு. J. M மெயிஜர் அவர்கள் ஐக்கிய தேசியச் சபையாரின் உதவித் திட்டத்தின் பிரகாரம் சீனி ஆக்கத் துறையில் உதவிபுரிவதற்குக் கொழும்பில் வந்திருக்கிறார். சீனி ஆக்கநிலையம் கிறிதல என்னும் இடத்தில் அமைக்கப்படும். அங்கே 6000 ஏக்கர் நிலத்தில் கரும்புச்செய்கையும் ஒழுக்குபண்ணப்படும்.

## வாக்குரிமையில்லாப் பெண்கள்

எகிப்திய நாட்டிலே பெண்களுக்குக் கல்வி உரிமையேயன்றி வாக்குரிமை இல்லை. பாராளுமன்றப் பிரதிநிதித்துவ உரிமையும் இல்லை. இது இப்படி யிருந்தலே முறை யென்று ஷயிறோ அல் அஷார் சர்வகலா சாலையார் வற்புறுத்தித் தீர்மானித்திருக்கின்றனர்.

ஸ்ரீமதி ஷாபிக் அம்மையார் இத் தீர்மானத்தை எதிர்த்து, இத் தீர்மானத்துக்கு அடிப்படையான ஆதாரக நியாயத்தைக் கூறும்படி அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனர். இத் தீர்மானத்துக்குக் குரானில் ஆதாரமில்லை யென்பது அவருடைய கொள்கை. அக் கொள்கையை மவுலானா அப்துல்கலாம ஆஸாத் முதலியோர் ஆதரிக்கின்றனர்.

அரசாங்க நீதிப்பிரிவினரும் சட்டப்பிரிவினரும் ஒருமித்து, அரசாங்க வழக்குத் தொடர்பவர் என்னும் ஒரு பதவியை உண்டாக்க ஆலோசிக்கின்றனர்.

# சைவம் தந்த தமிழ்ப் பண்பு

## அதை விளக்கினார் அமரகவி வள்ளுவனார்

சைவசமயத்தின் அடிப்படையே பண்பைக் கொண்டு அமைக்கப் பெற்றதுதான் என்று சுருங்கக் கூறலாம். நம் சமயத்தில் தோன்றிய பெரியார்கள் எத்தனைபேர் உள்ளார்களோ, அவர்கள் அனைவரும் பண்பின்வழி நிற்கவேண்டும், நாம் என்பதையே அறிவுறுத்திச் சென்றிருக்கின்றார்கள். திருக்குறள் நமக்கு எதனைக் காட்டி விளக்குகிறது? என்பதை அனைவரும் நன்குணரவேண்டும். வள்ளுவருக்கும், சைவ சமயத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன? அவரை நாம் ஒரு பொருட்டாகஅமைத்துக்கொண்டு, நம் சமயமாம் சைவத்தைப்பற்றிப் பேசிச் செல்லலாமா? திருவெண்ணீற்றைப்பற்றியோ, உருத்திராக்கத்தைப்பற்றியோ, அவர் பேசாது விடுத்திருக்கிறாரே என்கிற ஐயம், நம் ஒவ்வொருவர்பாலும் தோன்றும். இங்ஙனம் தோன்றுவதும் இயற்கையே! சமயத்தில் உள்ள உண்மை நிலைகளை உணராது, அச் சமயச்சின்னங்கள் மட்டில் உயர்ந்ததென எண்ணுகிறவர்களுக்குச் சடுதியில் ஐயம் தோன்றவேசெய்யும். இதன் மூலமாக யாம் சமயச்சின்னங்கள் அவசியமற்றன என்றெண்ணுவதாக யாரும் முடிவுகட்ட வேண்டாம். சமயம், நற்குணங்களின் ஈட்டத்தில் பண்பாகப் பரிணமஞ் செய்கிறது எனின் முதலிடங்கண்டு கொண்டு, போற்றவேண்டியவை [illegible] சமயம் பண்பை முதலிற் கொண்டமையான், பண்பின் நிலையைப் பகரும் வள்ளுவர் நம் இடையில் தோன்றி நிற்கிறார். அவர் வாய்ச் சொற்களால் உண்மைகளை விளக்குகிறார்.

### சமய உண்மைகள உணர்த்துவ தெதை?

பசுமைவாய்ந்த சோலையின் இடையில், அருவி வெள்ளம் இனி

> அ. நா. ப,
> திருஞானசம்பந்தன்

தே புரண்டு செல்லவும், அவ்வின்ப அமைதியிலே அன்பே திரு உருக் கொண்டதென மனிதன் அமர்ந்து, இயற்கை இறையின் எழில்சேர் காட்சியில் இனிதே இலயித்து அமரத்துவம் காண்பதை விடுத்து, வரண்ட பாலை நிலத்திலே, ஒரு காலத்தில் ஆறு சென்றதோ என ஐயுறும் வண்ணம் வரண்ட ஆற்றைக் கண்டு, சிதைந்த உள்ளத்தோடு புகலிடம் இன்றி அலைந்து செல்லும் குஞ்சிப் பறவைபோலத் தத்தளித்துச் செல்கிறானே? வாழ்கிறானே! இதற்குக் காரணம் என்ன என்பதை மக்கள் சிந்திக்கிறார்களா? சிந்தித்தால் வாழ்வு சிதையுமா? சிந்தித்தால் "மதம் மக்களை மயக்கும் அபின்" என்று கூறுவார்களா? ஆழ்ந்து சிந்தித்தால், சமயத்தின் உண்மைகள் மனிதனை உயர்த்துவன அன்றோ! அத்தகைய சமயத்தின் அடிப்படையே பண்பு நெறிதான்! இதனை நீத்துவாழும் மனிதன் நாகரீக வாழ்வு வாழ்வதாக மார்தட்டிக் கூறுவது நியாயமாகுமா? நேர்மையாகுமா? நாகரீகம் என்பது என்ன? பட்டுடை யுடுத்துப் பகட்டாகத் தெருவில் கைகால்வீசி நடப்பதா? அன்றி தினேதினம் திரைப் படக்காட்சிக்குச் சென்று, சொகுசாகப் படம் பார்த்து மனதிற்கு இன்பம் அளிப்பதா? அல்லவே அல்ல! இருக்கவும் முடியாது! மனிதன் குணங்களின் நிறைவால் வாழ்வதே நாகரீகம். குணங்கள் வளர வளர, அறம் வளர வளர, நாகரீகம் உயர்ந்ததாகச் சொல்வர் அறிஞர். சிறந்த குணங்கள் வளர்த்து, அனையோரும் சனி-நாகரிகர்களாக வாழவேண்டும் என்பதையே நமக்கு வள்ளுவர் பெருமான் வழி வகுத்துக் காட்டுகிறார்.

### எவர்க்கும் உரியன

திருவள்ளுவர் எவ்விதத் தனிப்பட்ட சமயத்தையும், பேசிச் செல்லாது, பொதுப் படையாகப் பேசிச்செல்கிறார் என்கிற காரணத்தால், அவர் கருத்துகள் இன்று அனைய சமயங்களுக்கும் வேண்டப்படுகின்றன. இன்று மக்களிடம் திருக்குறள் தனி இடம்பெற்று வருகிறது எனின் மிகையாகாது. பள்ளியில் பயிலும் சிறார்கள் முதல், பல்கலைக் கழகத்தில் பட்டத்தையே குறிக்கோளாகக்கொண்டு பயிலும் மாணவர் வரையிலே, இன்று திருக்குறள் கற்றுக் காலத்தைப் பயனுறச் செலவு செய்கின்றனர்.

வள்ளுவர் புகட்டும் பண்பு நெறி அனைவற்றையும் நம்சமயத்தின்பா

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமும் துயர்தீர்கவே


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஸ்ரீ ஆனிமீ ௪ ௨ செவ்வாய்க்கிழமை


## அநுபவத்திற்கு அரசியலில் அங்கீகாரம் இல்லையா?

இப்பொழுது நடைமுறையில் இருக்கிற அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுத்த சோல்பரி விசாரணைக் குழுவினரும் அவர்களுக்கு முன்பாகச் சாட்சியம் பகர்ந்த பல அறிஞர்களும் மேற்சபை அமைப்பைவிளக்கிக் கூறுமிடத்து அரசியல் அநுபவம் வாய்ந்த அறிஞர்களும் ஒவ்வொரு துறையிலும் கீர்த்திபெற்ற பிரபல நிபுணர்களும் இந்த இரண்டாவது சபையில் இடம்பெறவேண்டுமென்று உறுதியாக உரைத்திருப்பது பழைய சரித்திரக் கூற்றல்ல. மிக அண்மையில் எம் கண்முன்பாக நடந்த நிகழ்ச்சி வரலாறு என்பதை எவரும் மறக்கமாட்டார்கள்.

பாராளுமன்றம் அமைக்கப்பெற்றபொழுது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனித்தவகையிற் போதிய பலம் இல்லா திருந்தும் காலஞ்சென்ற திரு. D. S சேனநாயகவின் தலைமைக்குரிய தனித் தத்துவத்தால் ஐந்து ஆண்டுகளாக நெருக்கடி நிலைமையில் மோதுண்டு சிதையாது அக்கட்சி அரசாங்கம் வகித்து வந்தமை மறைந்த பிரதமரின் அநுபவ அறிவின் வெற்றி என்றே சொல்ல வேண்டும். கல்லூரிப் பயிற்சியிற் பட்டதாரியாகாவிடினும் உலகியல் உணர்ச்சியிலும் பலவித அநுபவச் செறிவிலும் மிக்கவராகையினாலே தந்தை சேனநாயக புதிய அரசியல் அமைப்பைச் செவ்வனே கொண்டு நடத்தினர் எனலாம். மைந்தன் டட்லி சேனநாயகவும் பிரதமர் பதவியை அடைந்தபொழுது தந்தையின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வரக்கூடிய நற்குண நற்செய்கை யுடைமையும் முன்னோரின் அநுபவ அறிவை உபயோகிக்கக் கூடிய ஆற்றலும் உள்ளவரென்றே கருதப்பட்டனர். அன்னர் பிரதமப் பதவி பெற்றுத் திங்கள்பல ஆகவில்லை. நன்று செய்வாரோ என்று சொல்லக் காலம் போதியது போகவில்லை. எனினும் மேற்சபை நியமனத்தைக் கொண்டு ஊகிக்குமிடத்துப் புதிய பிரதமர் இந்தக் காரியத்திற் போதிய ஆராய்வு செய்தார்போலக் காணப்படவில்லை.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, மேற்சபை அங்கத்துவம் வகிக்கக் கூடிய அநுபவ ஆற்றலும் பொதுநல உழைப்பிற் பெரிதும் ஈடுபட்டவர்களுமாகிய தலைமை சான்றவர்கள் இரண்டாவது சபைக்கு நியமனம் பெறுதிருக்கின்றமை அரசியற் பண்டிதர்களின் கவனத்துக்குரியதாகின்றது. சேர். அருணாசலம் மகாதேவா, ஸேர். வைத்திய லிங்கம் துரைசுவாமி, திரு. க. பாலசிங்கம், திரு. சு. இராசரத்தினம்போன்றஅறிஞர்கள் அரசியல் அரங்கத்திற் பலகாலம் தோற்றிப் பலரறியத் தொண்டாற்றினவர்கள். இவர்களில் யாராவது ஒருவர் இந்த மேற்சபையில் இடம் பெறக்கூடாதா? இப் பெரியார்கள் இருந்தால் இந்த இரண்டாவது சபையின் மதிப்பு எவ்வளவு அதிகரிக்கும். சிங்கள மக்களிலும் சேர். போல் பீரிஸ் போன்றவர்கள் இச்சபைக் கணிகலனுவார்களே!

சட்டங்களையும் திட்டங்களையும் அவசரம் அவசரமாகப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றினும் அநுபவம் மிக்க அங்கத்தவர்கள் கொண்ட மேற்சபையார் அவற்றையெல்லாம் ஆய்ந்தோய்ந்து பார்த்து ஆறுதலாக அமைதியாகப் புத்திமதி புகன்று தடுத்து வைக்கவோ திருத்தி அமைக்கவோ முயலுவார்கள். இந்த அமைதியான அநுபவ மேற்பார்வைக்கே இரண்டாவது சபை அமைக்கப்பட்டதல்லவா? அத்தகைய சபையில் ஆர் அங்கத்துவம் பூணவேண்டும்?

புதுமைப் பித்துப் பிடித்த புரட்சிக் காலம் என்றும் சனநாயகமுறையைக் கையாளுகின்றோம் என்று பறைசாற்றும் அரசாங்கக் கட்சியும் பழைமையைத் தள்ளி விட வேண்டுமா? ஊன்றுகோல் உதவிவேண்டும் தாத்தாக்களை நியமனஞ் செய்வதா என்று ஒவ்வாத நியாயஞ்சொல்லி விடமுடியுமா? பிரதமர் நேரு, ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார், சனுதிபதி பிரசாத் ஆகியோர் தாத்தாக்களா, வாலிபர்களா என்று கேட்கிறோம். சர்ச்சில் மழலை மொழியுங் குழந்தையா? அன்றியும் மேற்சபையிற் சொற்போர் நடத்தக்கூடிய சுறுசுறுப்பான இளமைக் கிடமில்லையே! காரியத்தைச் சீராய் ஆராயும் அமைதி மனப்பான்மைக் கல்லவோ இடமுண்டு.

அல்லாமலும் பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபைக்கு அபேட்சகர்ளாகித் தோல்வி யடைந்தவர்களுக்கு மேற்சபை ஓர் தங்குமடமா? வெற்றி கிடையாத விசனத்தை விலக்குவதற்கு ஒதுங்கும் மன்றமா? பாராளுமன்றத் தேர்தலிலே கலந்து விட்டால் அரசியல் [illegible] பட்டதாரி [illegible] முடியுமா?

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### இதுதான் உலகம்!

தேர்தல் முடிந்ததும் தெருவீதியிற் பெரிய கலவரம். எதிராக நின்று தேர்தற் போரிற் பங்குபற்றியவர்களில் ஒருவர் மற்றையவரைப் பார்த்து “கள், சாராயம், காசு எல்லாம் கண்டபடி நடமாடினது தெரியாதோ! இப்படி நாங்கள் ஒருபோதும் செய்யமாட்டோம்” என்று கடுங்கோபமாகச் சொன்னர். இதிற் சொல்ல வேண்டியதில்லை என்றுர் பரிகாசமாக மற்றையவர். நீங்கள் ஒருமாதகால உபவாசம் என்பது எங்களுக்குத் தெரியும். கள் சாராயத்தை என் சொல்லுவான் பால் பழந்தானும் இல்லாமல் இருந்தீர்களாமே” என்று போட்டி போட்டார். கதை வளர்ந்தது. கைவரிசை காட்டப்படுந் தருணம்!

* * *

இதற்கிடையில் வந்தார் ஒருவர். துள்ளினர் துற்றினர், முக்கியவரைப் பார்த்து என்ன பெரிய வெள்ளைவேட்டி வேடம் போடுகிறீர், அனைதிரவு எல்லாருக்கும் போத்தல்களை கொடுத்தீர்கள் எனக்குமட்டும் தரமுடியாமற் போய்விட்டதோ, நீங்கள் மட்டுந் போடுவதும் பாடுவதும் நாங்கள்மட்டும கனுக் காண்பது போலே என்று பெரிய சொற்போர் நடந்தது மாமிசம் களவுகொடுத்த பூசாரி போல ஒன்றும் பேசவியலாது வெட்கித தலை குனிந்தார், வீரப் பேச்சுப்பேசி வலியச் சண்டை தொடுத்தவர்.

* * * *

தேர்தல் நடந்தது பிழையான வகையில் என்று ஒரு சாரார் மாபெருங் கூட்டம் கொழும்புமா நகரிற் கூடினர். இடிமுழக்கஞ்செய்தனர், நடந்தது சனநாயகத்திற்குச்சம்பூரண வெற்றி என்று நிரூபிக்க அரசாங்கக்கட்சியார்வேறொரு மாபெருங்கூட்டம் அதேஇடத்தில் அடுத்த சனிக்கிழமை கூடுவார்களாம், பேச்சுப்போட்டியினுல் மக்களின் இச்சையைத் திருப்தி செய்ய நல்ல முறை நவீன உலகிலே கண்டிருக்கிறுர்கள். ஏதாவது ஒரு காரணம்பற்றி மாபெருங்கூட்டம்நிறுவவேண்டும் ஒலிபரப்பி மூலம் ஏச்சுப் பேச்சைக் காற்றிற் பரவவிடவேண்டும். இவ்வளவும் போதும் இவ்வுலக வாழ்விற் பயனடைய என்பதே இப்போதைய புத்தம் புதிய அரசியற் கொள்கை.

‘நுணலும் தான் வாயாற் கெடும்’ என்றுங்கு பேச்சினுல வரும்போாபத்தைப் பின்னரே உணர்வார்கள். முசோலினி ஹிட்லர் முதலிய வீச்சுப்பேச்சாளர்கள் மூர்ச்சை யற்று மடிசாய்ந்து முடிவிற் பழி சூட்டப்பட்டவரென்ற உதாரணத்தைப் பலமுறை எடுத்துக் காட்டினுலும் “இச்சகிச்சென்னும் பேச்சு” நடந்தே தீரும்.

* * *

உடுக்க உடையில்லாதவனுக்கும் உண்ண உணவில்லாதவனுக்கும், பருக மருந்தில்லாதவனுக்கும்பேச்சினுல்வரும் பெறுபேறு போதிய பதிலளிக்குமா என்று பொதுசனம் கேட்கின்றுர். உலகப் போக்கு கலகத்தையும் கலவரத்தையுமே நாடுகின்றது. இருபது வருடங்களுக்கு முன் அமைதியாக ஆறுதலாகக் காரியம் பார்த்த அரசியல் ஞானிகள் ஊமைகளாயிருந்தார்களா அல்லது நாக்கை எழவிடாது தடுத்தார்களா நேயர்களே சொல்லுங்கள்.

## ஆந்திர அரசு

தனி ஆந்திர அரசு அமைக்கவேண்டுமென்னும் ஆந்திர மக்களுடைய எண்ணத்தின்படி ஆந்திர அரசமைப்பைத் தாமும் விரும்புவதாகப் பண்டிதநேரு அவர்கள் டக்டர் இலங்காசுந்தரம் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் வெளியிட்டிருக்கிறுர்.

## பரீட்சைக் கேள்விகளுக்குப் பிரத்தியேக சபை

பரீட்சைக் கேள்விப் பத்திரங்கள் ஒரேவிதமாய் நீதியானவையாய் அமைப்பதற்கு ஒரு சபை வித்தியாபகுதியாரால் அமைக்கப்பட்டிருக்கின்றது. வருகிற கார்த்திகை மாசம நடக்கும் பரீட்சைக்கு இச் சபையாரே கேள்விப் பத்திரங்களை ஒழுங்கு செய்வர்.

## வர்க்குச்சீட்டுச் சிக்குப்பாடு

அதிகாரிகளிடம் மாத்திரம் இருக்கவேண்டிய வாக்குச்சீட்டுகள் நாட்டிலே யுலாவத் தொடங்கி விட்டன என்பது ஒரு வதந்தியாகவே யிருந்துவந்தது. இப்பொழுது அது ஒரு நிச்சயமான உண்மையாய் வெளிவந்திருக்கின்றது.

நாடெங்கும் பொய்யே அடிப்படையான வாழ்க்கைமுறை பரந்து நிலவவேண்டுமென்பது, அரசாங்கத்தின் கருத்தாயிருந்தாலன்றி இச் சிக்குப்பாட்டை நேரானமுறையில நீக்குதற்குக் காலதாமசமின்றித் தகுதி வாய்ந்த விசாரணைச் சபையொன்றை அரசாங்கம் அமைத்தல் வேண்டும்.

## பெண் பொலீசார்

ஆறுவார காலத்துக்குள் இலங்கையில் முதன் முதலாகப் பெண் பொலீசார் ஆறுவர் நியமிக்கப்படுவர். இப் பெண்கள் ஒருவாறு தகுந்த கல்வியறிவுடையவராகவும், நல்ல தேகசுகம் உள்ளவராகவும் இருக்க வேண்டுமென்றும், பொலிஸ் தலைமைஅதிகாரிசேர்.றிச்சாட். அலுவிகார அவர்கள் கூறினர். முதன் முதல் இவர்கள், பெண்கள்மேல்வரும் குற்றங்களையும், பிள்ளைகளின் மேல்வரும் குற்றங்களையும் கவனிப்பார்கள். இவர்களுக்கு ஒரேவித உடுப்பு வழங்கப்படும். இவர்களுக்குத் தங்குமிடமும், உடையும் கொடுக்கப்பட்டு அத்துடன் நீதியான சம்பளமும் கொடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

## அலங்கோலத் தேர்தற் பிரேரணை

### ஆராய்ச்சிப் பயனே அறிவுரைக்குரியது

பொதுத்தேர்தல் மிக அலங்கோலமாக நடந்திருக்கிறது எனப் பத்திரிகைகளிற் பலர் கைச்சாத்திட்டு ஆதாரங்காட்டி எழுதியிருக்கின்றனர். மேடைகளில் வெளிவாகக் கூறியிருக்கின்றனர். இவர்கள் தங்கள் சொற்களுக்கு, தங்கள் எழுத்துக்களுக்கு, தாங்கள் பொறுப்பல்லவென்று சொல்லக் கூடுமா? இவர்களுடைய கூற்றுக்கள் பிழையானவை, பொய்யானவை என்று நிலைநாட்டப் பட்டால் இவர்கள் அரசாங்க தண்டனைக்குள்ளாகாது தப்ப முடியுமா? ஒருபோதும் முடியாது. பிழைகள் உண்மையில் நடந்திருந்தால் அவற்றுல் நாட்டுக்குப் பெருந் தீமை விளையுமல்லவா? இவற்றை உற்று நோக்கியே சில பத்திரிகை ஆசிரியர்களும் விசாரணைக் குழு வேண்டுமென்று வரைந்திருக்கின்றனர். அப்படியிருக்க, அவர்களுடைய கூற்றுகளுக்கு விபரீதமான விளக்கங் கொடுத்தல் ஒருநீதிபதியானவர்வாதி பிரதிவாதிகளின் கூற்றைவிசாரணை செய்யாது தீர்ப்புக் கொடுத்தல்போல யாராயினும் கூறிவிடுதல் “சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்து ஒருபாற்கோடாமை சான்றோர்க்கணி” என்னுத் தமிழ் மக்களின் சிறந்த வாழ்க்கைப் பண்பாட்டினைபாற்பட்டதல்ல.

அவ்வாறு கொள்ளுதற்குப் போதிய வெளிப்படையான நியாயங்களிருக்கின்றன. அவற்றுள் ஒன்று பாராளுமன்றத்திலே எதிர்க் கட்சியினரால் விசாரணைக்குழு அமைக்குமாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பிரேரணையாகும். அது பன்னிரு உறுப்புகளை யுடையது. ஒவ்வொரு உறுப்பும் ஒவ்வொருவித குற்றச்சாட்டைக் குறிக்கின்றது. குறித்த பிரேரணையின்படி விசாரணைக்குழு அமைத்து, விசாரணை செய்யப்பெற்று, செய்த விசாரணையின்படி குறித்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என அத்தாட்சிப்பண்ணிய பின்பே கண்டன மொழிகள் தகுதியுடையனவாகும். அப்பொழுதே அவை மக்களுக்கு நல்ல வழிகாட்டும் அறிவுரைகளாகும்.

### அரசாங்க உதவி வேண்டும்

புத்த சமய அறிவொழுக்கப் பண்பாட்டுச்சபையார் புத்தசமயத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்க உதவி கேட்டுநிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாகப் பதிவுப் பணம்

விவாகம் பதிவு செய்வதற்கு விவாகப் பதிவுகாரருக்குக் கொடுக்கப்படும் பணம் இனி இருமடங்காக்கப்படும். இந்தத் தீர்மானம் விவாகப்பதிவுகாரர் சங்க வேண்டுகோளின்படி செய்யப்பட்டிருக்கின்றது.

இப்புதிய திட்டத்தின்படி விவாகம் பதிவுசெய்வோர் கொடுக்கும் ஐம்பது சதத்துடன் அரசாங்கம் இருமடங்கு பணங் கொடுக்கும். தமது கந்தோருக்கு வெளியே ஒரு பதிவுகாரர் ஒரு விவாக அறிவித்தலில் கையொப்பமிடுவதற்கு இருமடங்காக்கி விதிக்கப்பட்ட பணம் ரூபா 5-00. விவாகம் பதிவு செய்வதற்கு இப்பொழுது கொடுக்கப்படும் தொகை (ரூபா 20-00) குறித்த பதிவு மாலை 6மணிக்கும் காலை 6 மணிக்கும் இடையில் செய்யப்பெறுமாளுல் ரூபா மூப்பதாக உயர்த்திக் கொடுபட வேண்டும்.

## Dr. பட்டாபி சீதாராமையா

### மத்திய பிரதேச தேசாதிபதியாக நியமனம்

ஆந்திர மகாநாட்டின் காங்கிரஸ் தலைவரான Dr. பட்டாபி சீதாராமையா, மத்திய பிரதேசத்துக்குத் தேசாதிபதியாக நியமனஞ் செய்யப்படுவாரென அறியவருகின்றது. இப்போதைய தேசாதிபதி மங்களதாஸ் பக்வாஸா அவர்கள் ஆனி 30 உ Dr. பட்டாபி சீதாராமையாவிடம் தவிசை ஒப்படைத்துப் பம்பாய் மாகாணம் திரும்புவாரெனத் தெரிகின்றது.

## எச்சரிக்கை!

பொதுமக்களின் முறைப்பாட்டின் பிரகாரம் கடைகளில் உள்ள தராசு, படி முதலிய அளவு கருவிகளை முன்னறிவித்தலின்றிப் பரிசோதனை நடத்துவதாக நகரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்; நகரசபை அதிகாரிகள் ஒவ்வொருநாளும் சடுதிப் பரிசோதனை நடத்துவார்கள் என அறியவருகின்றது.

## குருநாகல் சைவமகா சபை

மேற்படி குருநாகல் சைவமகா சபை பண்டபத்தில் திரு. P. தம்பிராசா J. P. அவர்களின் தலைமையில் சென்ற 8-6-52 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு சபையின் 22-ம் ஆண்டு நிறைவுவிழா ஆரம்பமாயது.

காலை நிகழ்ச்சியில் திரு S. சேதுகாவலர் M. A. அவர்கள் "பக்தி" என்பதுபற்றியும், S. சிவலிங்கம் B. O. L. அவர்கள் "இலக்கிய இன்பம்" என்பதுபற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்.

12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெற்றது. பிற்பகல் நிகழ்ச்சியில் வித்துவான் க. வேந்தனர் "மாணிக்கவாசகரின் அன்புக்குரல்" என்பதுபற்றியோர் அரிய விரிவுரை நிகழ்த்தினர். பின்னர் ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களின் சங்கீத விருந்தளிக்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். ஈற்றில் காரியதரிசியவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. புத்தாண்டுக்குப் புது உத்தியோகஸ்தரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஆனைக்கோட்டை ஸ்ரீ முருகமூர்த்திகோயில்

நீடித்த காலமாகக் கிலமடைந்திருந்த இக் கோயில், லெநேசர் செல்வர் பலருடைய பொருளுதவிகொண்டு, திருப்பணி நிறைவேற்றி, சென்ற சித்திரை மாசம் 19 உ வியாழக்கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திற் சம்புரோட்சண கும்பாபிஷேகமாகி, அன்று தொடக்கம் தொடர்பாகப் பதினைந்து நாள் விசேட அபிடேகம் நடந்தபின், இந்த ஆனி மாசம் 1-ம் தேதி சனிக்கிழமை சங்காபிடேகமும் இரவு திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றதென அறியலானோம்.

## அக்கரையான்குளக் குடியேற்றம்

அக்கரையானகுளம் என்னும் இடம் முறிகண்டிப்பிள்ளையார் கோவிலுக்கு மேற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ளது. நல்ல செல் நிலம். இங்கே குடியேற்றுவதற்கு இட்ட திட்டத்தின்படி ஒவ்வொருவருக்கும் 15 எக்கர் நிலம் கொடுக்கப்படும். பெருந் தொகையினர் இடங் கேட்கின்றனரென அறியவருகிறது.

## 20 லட்ச ரூபா கடன்

குடிசைக்கைத்தொழில் ஸ்தாபனத்தார் 1952-53 நிதி வருடக் கணக்கின் பிரகாரம் 20 லட்ச ரூபா, குடிசைக் கைத்தொழிலை ஐக்கிய முறையில் விருத்திசெய்ய, விநியோகிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது. மிருதிச் செலவுகளின் பொருட்டு, இவ்விஸ்தாபனம் 7 லட்ச ரூபா பெற்றிருக்கின்றது. இப்பொழுது குடிசைக் கைத்தொழில் மிகவும் குறைவாகவுள்ள வடமத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும், மன்னர், வவுனியா, அம்பாந்தோட்டை, திருகோணமலை முதலிய இடங்களிலும், கையால் நூல்நூற்றல், நெசவு செய்தல், தச்சுவேலை, கூடை, பாய் முதலியன முடைதல், பிரம்பு, மூங்கில் முதலியவற்றில் வேலைசெய்தல், பானைவனைதல், தையல்வேலை, கயிறுதிரித்தல் ஆகிய வேலைகளை உண்டாக்கவே இவ்விருபது லட்சமும் செலவிடப்படுமெனத் தெரிகின்றது.

## மேலும் நான்கு அங்கத்தவர்கள் மீது குற்றச்சாட்டு

கண்டி, களுத்துறை, பட்டிருப்பு, பொரளுகில் ஆகிய இடங்களுக்குப் போட்டியிட்டு அதில் வெற்றி கண்ட திரு. E. L. சேனநாயக, திரு. P. A. குரே, திரு. S. M. ராசமாணிக்கம், திரு. M. M. இப்ருகிம் ஆகியோர்மீது, வழக்குத் தாக்கல் செய்வதற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கின்றது. இவர்கள் குடிவகைகளினலும் கையெழுத்திலாத துண்டுப் பிரசுரங்களினலும், மற்ற அங்கத்தவர்களைத் தூற்றிப் பொதுஜனங்களை மயக்கி வெற்றி பெற்றுர்கள். ஆதலால் இவர்களுடைய தேர்தல் நேர்மை யற்றதென்றே இப்பொழுது வழக்குத் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.


## விளம்பரம்

### தெருவிளக்கேற்றுவதற்கு ஆள் தேவை

யாழ்ப்பாண நகரசபை மேயர் அவர்களால் தெருவிளக்கேற்றும் உத்தியோகத்திற்கு மனுப்பத்திரங்கள் 1952ம் ஆண்டு ஆனி (June) மாசம் 21ம் திகதி 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பளம்.

720 ரூபா வருட நிரந்தரச் சம்பளமும் அதற்குரிய வழக்கமான வாழ்க்கைச் செலவும் கொடுக்கப்படும்.

விண்ணப்பக்காரர்கள் மின்சார விநியோகத்திலும் "லயின்" வேலையிலும் வீடுகட்குக் கம்பியிடுதலிலும் அநுபவம் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

Sam A Sabapathy
மேயர்,

யாழ்ப்பாணமுனிசிப்பல்கந்தோர்
யாழ்ப்பாணம்
நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம் 14 ஆனி 1952.
G. 12 17—6—52.


## தேகவியோகம்

### செல்வி, க. இரத்தினம்

நீர்வேலி சி. க. வேலாயுதபிள்ளை அவர்களின் இளைய சகோதரியும் திருநெல்வேலி சைவ ஆசிரியசாலையில் இருந்த முத்துத்தம்பி வித்தியாசாலையில் படித்த செல்வி, க. இரத்தினம் தமது 22-வது வயதில் சென்ற 2-6-52 திங்கட் கிழமை மாலை 4-30 மணியளவில் இவ்வுலக வாழ்வைநீத்துச் சிவபதமடைந்தார். இவரது ஆன்மா சாந்தியடைக.


## எச்சரிக்கை

என்னல் அத்தாட்சிப் படுத்தப்பட்ட $\frac{1075}{28452}$ ம் இலக்கப் பதிவு செய்யப்பட்ட மூலப்பிரதி ஈட்டுறுதி கைதவறிப்போய் விட்டது. இவ்வுறுதியை யாரும் கைவாண்டவர் கபடமாக உபயோகிக்க எத்தனித்தால் யாவரும் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூ. மதியாபரணம்
கொத்தாரிசு
கொக்குவில்

M 42 17-6


# சைவம் தந்த தமிழ்ப் பண்பு

(முதற் பக்கத் தொடர்ச்சி)

வேற்றுக் கணக்கிட்டுக் கண்டால் முற்றிலும் பொருத்தமாகவே இருக்கும். சைவ சித்தாந்தக் கொள்கைகளை மறைமுகமாகக்கொண்டுதான் திருக்குறள் எழுந்ததோ என்ற எண்ணம், அதனைத் தெள்ளிதின் படித்துச் செல்வோர்க்கு விளங்கும். இன்று திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்று சித்தாந்த உண்மைகளை அயல் நாடுகளில், குறள் கருத்துக்களைக் கொண்டு நிலைநாட்ட முடியும். இதற்கு உறுதுணைபுரிபவர் வள்ளுவர் அன்றோ? இதனை இன்றைய அறிஞர் உலகம் நன்கு கண்டிருக்கிறது. வள்ளுவர் தம் குறட்பாக்கள் நம் சமயத்திற்கே பெரிதும் துணைபுரிந்து நிற்கின்றன என்ற ஒரு கொள்கைபற்றியும், அன்றியும் பண்பின் அடிப்படையில் தோன்றியது நம் சமயம் என்பதையுங் கொண்டு, அவர் அப் பண்புநெறிக்கே அழுத்தம் திருத்தமாக ஆக்கந்தேடிச் செல்வதால், அவர் இவ்விடத்தில் இடம்பெறுகிறார் என்பதே உண்மை. இதனை அறிந்தோர் வள்ளுவர் பெருமையினைப் பாராட்டி வியவாதிரார். அவர் பண்பால் வரும் பெரும் பயனையும், பண்பறிருப்பதால் வரும் பெருங் கேட்டையும், தம் குறள்மூலம் கையாண்டு செல்வதைக் காண்போம்.

### பண்புடைமையாற் பெறும் நலங்கள்

பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைக் குணத்தின் நீங்காத சொல்லை ஒருவன் சொல்வானுனல், அச்சொல்லானது அவனுக்கு இம்மைக்கு வேண்டிய நீதியை உண்டாக்கி மறுமைக்கு வேண்டிய அறத்தையும் உண்டாக்கும்,

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற்றலை பிரியாச் சொல்.

வேற்று வேந்தரிடத்து நன்றிய உபாயஞ் செய்யும் இடத்துக் குற்றமுண்டாகும் அவ்வவர்குணங்களை ஆராய்ந்து, அவ்வவர் குணங்களுக்கேற்பச் செய்ய வேண்டும். யார் யாருக்கு எவை எவை விருப்பமோ, அவற்றினை அறிந்து பணியாற்றலும் பண்பின்பாற்பட்டதே

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

தம்மை மிகத் துன்பம் செய்யும் தன்மையரிடத்தும், கண்ணோட்டம் செலுத்தும் இயல்பினாலிக் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்புடையவர்களே பண்புடையவர்கள்.

ஒறுத்தாற்றும் பண்பினர்
கண்ணுங் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை

பரம்பரையாக வரும் உயர் குடியினிடத்துப் பிறந்தவர் தாம் வறியவர்க்குக் கொடுக்கும்பொருள் குறைபட்ட காலத்தும், இயன்றமட்டிலாவது கொடுக்குங் குணத்தை விட்டு நீங்கார்.

நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்தாராலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.
(ஔவையார்)

வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.
(சித்தாந்தம்)


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ரூணி மார்க் ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

...ரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.


## இந்துசமயப் பிரசாரகரின் யாழ்ப்பாண வருகை

அகில மலாயா தமிழ்ப் பண்ணைத் தலைவரும் அகில மலாயா இந்து சமயப் பிரசாரண சபா தலைவருமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ K. இராமநாதன் B. A., B. L. அவர்கள் இம்மாசம் 25-ம் திகதி புதன் கிழமை ஆகாயவிமான மூலம் வந்து காங்கேசன் துறையிலே தங்குவார்கள். இவரது வருகையை மலாயாவிலிருந்த இலங்கை அன்பர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகும். ஸ்ரீ இராமநாதன் அவர்கள் இங்கு 5 நாட்கள்வரை தங்கியிருப்பார்கள். இந்நாட்களில் பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றுவார்கள்.

## செய்தித் திரட்டு

=O=

உபாத்தமாருக்கு உள்நாட்டு அரசாங்க சேவையிலுள்ளோருக்குச் செய்திருக்கும் ஒழுங்குபோல உபகாரச் சம்பள ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

X X X

கதிர்காமம் இராமகிருஷ்ணமடத்தில் வாரம் வெட்டும்போது பழைய செப்புக்காசுகளுடன் ஒரு அண்டா காணப்பட்டு அரசாங்கத்தாரிடம் கொடுபட்டதாய் அறியவருகிறது.

X X X

அணுக் குண்டுக்கு வேண்டும் அணுசக்தி தரக்கூடிய லோகவகைகள் சென்னைப் பகுதியிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

X X X

காத்தான்குடியாவில் சபாநாயகர் திரு அல்பேற் பீறிஸ் அவர்களுடைய தெரிவைப்பற்றி திரு. B. S. பர்ணுந்து ஆட்சேபிக்கின்றார்.

X X X

மாத்தளையில் திரு. பேர்னுட் அலுவிகார அவர்களது தெரிவை திரு. V. J. கானுப்பா ஆட்சேபிக்கிறார்.

X X X

சந்தாளு என்னும்இடத்திலுள்ள சென்ற் யோசெப் குருட்டுப் பாடசாலையில் கல்விகற்றுவரும் குமரிசாமி என்னும் 13 வயதையுடைய சிறுமி ஒருத்தி 4000 ரூபா பெறுமதியான ரேடியோ ஒன்றைப் பரிசாகப் பெற்றிருக்கிறள். இவள் அகிலஉலகக் கட்டுரைப் போட்டியில் இரண்டாவதாகச்சித்தியடைந்தமைக்கே இப் பரிசுவழங்கப்பெற்றது.

X X X

டெல்கியிலுள்ள மத்திய மந்திரிசபை மந்திரிகள் இப்பொழுதும் மாதம் 3000 ரூபா சம்பளம் பெறுவதாகவும், இதனைக்குறைத்து மாதம் 2500 ரூபா கொடுக்கப் போவதாகவும் ஓர் இந்தியப் பத்திரிகை கூறுகின்றது.

X X X

எலிசபெத் இளவரசியார் தனது முதலாவது பிறந்த தினக்கொண்டாட்டத்தின்போது ஏறிச்சென்ற குதிரை, சிறிது முரண் செய்ததெனஅறியவருகின்றது. சேனைவீரர் முதலியோர் நிரையாகச் செல்லும்பொழுது இக் குதிரை நேரே போவதற்குப் பதிலாகத் திரும்பியதாகவும், பின், பாதுகாவலர்க்குரிய வேறோர் குதிரை அவ்விடத்திற்கு வந்ததாகவும் தெரிகின்றது. முதலாவது இளவரசியார் நாலு நூற்றாண்டுகளுக்கு முன் குதிரைச் சவாரி செய்தற்குப் பின், இங்கிலாந்து தேச இளவரசியாராகிய இரண்டாவது எலிசபெத் மகாராணியார் குதிரைச் சவாரி செய்தது இதுவே முதற்தடவையாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

### மறவன்புலோவில்

ஷை குருபூசை மறவன் புலோ கிராம முன்னேற்றச் சங்கம், சமூகசேவா சங்கம் பெ. ஆ. சங்கம் என்பவற்றின் ஆதரவில் 9—6—55 திங்கட்கிழமை பி. ப 2 மணியளவில் சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் ஷை வித்தியாசாலை மாணவரின் தேவார சிவ புராணங்களுடன் கொண்டாடப்பட்டது.

பிற்பகல் 2-30 மணியளவில் திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமை உரையாகச் சைவ சமய மகிமையும் கைக்கொள்ளும் வகையும்பற்றி மிகவும் சிறப்பாகக் கூறினர். ஆசிரியர் திரு. ஐ. சதாசிவம் அவர்கள் ஷை நாயனாரின் சிவிய வரலாற்றினை விளக்கிக் கூறினர். ஆசிரியர்கள் திரு. வ. பொன்னையா, திரு. சா. கம்பேயர், திரு கா பொன்னம்பலம் என்பவர்கள கூறிய குறிப்புரைகளில் நாயனாரால் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட வளர்ச்சியையும் அதனால் நாம் அடையக் கிடக்கும் பலாபலன்களையும் விளக்கியுள்ளனர்.

தலைவர் கிறைவுரை, தலைமையாசிரியரின் நன்றியுரை தேவாரபாராயணம் என்பவற்றுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

卐

### தெல்லிப்பழையில்

மேற்படி குருபூசை வைகாசியீ 27உ (9-6-52) திங்கட்கிழமை பிற்பகல், ஸ்ரீகாசிவிநாயகர் ஆலய மண்டபத்தில், பாலர்ஞானோதய சபை மாணவர்களால், சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ மு. சிவசிதம்பரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

மாலை 4 மணியளவில் ஸ்ரீகாசிவிநாயகருக்கும் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவுருவப்படத்திற்கும் விசேட ஆராதனைகள் நடைபெற்ற பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் தமது முன்னுரையில் திருஞானசம்பந்தசுவாமிகள்சிறுவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக, அமைந்துள்ளாரெனவும், அவர் ஞானருள்பெற்ற அடியாருள் உன்னத நிலை பெற்றவரென்றும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றுங் கூறினர்.

அதன்மேல் செல்வன் ந. ஜெகதீஸ்வாஐயர், செல்வி. பொ. பொன்மணி, செல்வி. சு. கெங்காதேவி ஆகியோர் முறையே 'தேவாரம்பாடியதெய்வக்குழந்தை' 'சிவஞானச் செல்வனின் அன்பு நெறி' 'ஞானசம்பந்தரின் அற்புதங்கள்' என்னும் விஷயங்கள்பற்றிப் பேசினர். மாணவமாணவிகளால் தேவாரம் ஓதப்பெற்றது 5½ மணியளவில் முடிவுற்றது.

## சனசமூக நிலையங்கள்

### அரசாங்க நிலையங்களா?

மொறட்டுமுல்ல பொது சன சமித்திய (சனசமூக நிலயம்)த்தின் ஐந்தாம் வருடாந்த விழாவுக்கு மொறட்டுவப் பிரதிநிதியை ஏன் அழைக்கவில்லை என்னும் ஒரு வினா காரியதரிசிக்கு விடுக்கப்பட்டது. குறித்த பிரதிநிதி அரசாங்கத்துக்கு மாருகப் பேசுவார். சனசமூக நிலையங்கள் அரசாங்கத்திடம் உதவிப்பணம் பெறுகின்றன. ஆகையால் அந்நிலையங்களிலே அரசாங்க கண்டனத்துக்கு இடங் கொடுக்கக் கூடாதென்று நிலையத் தலைவர் அபிப்பிராயங் கொண்டார் என்பதே காரியதரிசியின் விடையாயிற்று.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு, பேர். கா. தாமோதரம் பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும கீழ் விபரிக்கப்படும் நகைகளை 28-6-52 சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உ. மீ ஞு | கொடுத்த ரூபா | ஊர் பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|
| 306 | 9—4—51 | 19 | இடைக்காடு மேற்கு சின்னையா வேலுப்பிள்ளை இமி. சி. வெ. கல் தோடு சோடி | 1 |
| 4314 | 10—4—51 | 30 | சஞ்சுவான் கோவிலடி செல்லப்பா இராசேந்திரம் இமி கல்.தோடு சோடி | 1 |
| 4447 | 30—4—51 | 20 | கடைத்தெரு No 160 பொன்னையா சண்முகராசா இமி. சி. வெ.கல் தோடு சோடி | 1 |
| 4456 | 2—5—51 | 10 | மானிப்பாய் வடக்கு தியாகராசா நாகேந்திரம் இமி. கல் மூக்குத்தி | 1 |
| 4484 | 8—5—51 | 130 | உரும்பிராய் தெற்கு வயித்திலிங்கம் சிவரெத்தினம் முத்துகட்டியதோடு சோடி | 1 |
| 4526 | 16—5—51 | 210 | சிவியாதெரு கதிரவேலு தம்பையா ரேடியோ காப்பு சோடி | 1 |
| | | | இமி கல் புரூச் | 1 |
| 4551 | 26—5—51 | 30 | கொழும்புத்துறை சபாபதி செல்லத்தம்பி தாலி | 1 |
| 4559 | 28—5—51 | 60 | கந்தரோடை கந்தையா ஆறுமுகம் சிகில் மோதிரம் | 1 |

வண்ணார்பண்ணை, சி. பசுபதிச்செட்டியார்

12-6-52. வெந்திஸ் மேஸ்தர்.

ஏல விற்பனவு 1952 ஆ ஆனி மூ 28 உ சனிக்கிழமை.

( M. 40 13—6—52. )


○ நீங்கள் இளமைப்பருவத்தை அடைய

சி. எம். சாமி

## தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.

இதற்கு நிகராவமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும. நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு. வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I

(கிப்சட்லாக் இனம்)

M. 16. 25-4-52—25-10-52.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாவோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



## "பத்திரானஸ்"

இதுவே அருந் தருணம்!



உங்கள் கண், பல் என்பனவற்றைச் சோதிப்பிக்கத் தவருதீர்கள்

சோதப்பித்துச் சிகிச்சை செய்தற்காகிய இந்தத் தருணத்தைத் தவற விடாதீர்கள். எங்கள் நீண்டகால அநுபவமும் சேவையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தும் தற்கால சாஸ்திரீய உபகரணங்கள எங்கள் வசம் இருக்கின்றன. மேலும் எங்களிடமுள்ள அழகிய புது மாதிரியான செயற்கைப் பல்வரிசைகள் நீடித்தகாலம் நின்று பிடிக்கக்கூடியன என்பதை உங்களுக்கு அறிவிக்கின்ருேம்.

வோன் இல. 271
(கிளைத்தாபனம்)
22, கண்டிரோட், குருநாகல்.
111, முதல் டிவிஷன், மருதானை.

"பத்திரானஸ்"
தந்த நயன வைத்தியசாலை
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

PATHIRANAS

Dental Laboratory & Optical Works

28, Main Street, Jaffna



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.

லெப்பை பிரதஸ்

தங்கமாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப்பெரிய

## நகை

வியாபாரிகள்

—○—

தந்தி: "JEWELLERS"

போன்: 161.

கிளைத்தானம்:

63, கன்னாதிட்டி

யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. June 17. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org